# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண்.396/2012

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. மாதேஸ்வரன் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சண்முகம் | தொழில் | .. தறி |
| வயது | .. 62 | ஜாதி | .. செங்குந்த முதலியார் |
| கிராமம் | .. இடங்கணசாலை | நாள் | .. 08.11.2021 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. மாதேஸ்வரன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.2 - மாதேஸ்வரன் - 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

எனது சாட்சிய பிரமாண பத்திரிகையில் கூறியுள்ள தகவலை யார் கூறினார்கள் என்றால், சம்பத் என்பவர் கூறினார். சாட்சிய பிரமாணபத்திரிகையில் கூறியுள்ள விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும், யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் தெரியுமா என்றால், தெரியும். வழக்கு சொத்து விபரமும் தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சம்பத், கமலம்மாள், ஸ்ரீமதி, சரஸ்வதி, பொன்னி ஆகியோர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், பவுனம்மாள், செல்வம், மூர்த்தி, பேபி, மணிமேகலை ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள். மரகதம் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால், அந்த விபரம் எனக்கு எதுவும் தெரியாது. மரகதம் என்பவர் யார் என்றால், சம்பத் என்பவரின் அக்கா ஆவார். மரகதம் என்பவர் எந்த பங்கும் வழக்குச்சொத்தில் கேட்கவில்லை என்றால், சரிதான். அவ்வாறு பங்கு கேட்காததற்கான காரணம் ஏதேனும் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால், எனக்கு எந்த விபரமும் தெரியாது. மரகதம் என்பவர் வழக்கு சொத்தில் பங்கு உள்ளதா அல்லது மரகதம் என்பவர் ஏன் வழக்கு நடத்தவில்லை என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்தில் எத்தனை

வீடுகள் உள்ளன என்றால், இரண்டு வீடுகள் உள்ளன. அந்த வீடுகளின் கதவு எண்கள் தெரியுமா என்றால், தெரியாது. இரண்டு வீட்டிற்கும் மின் இணைப்பு உள்ளதா என்றால், உள்ளது. மின் இணைப்பு எண்கள் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்து ஆதியில் வல்லி இடும்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். வல்லி இடும்ப முதலியாருக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள் என்றால், அது எனது தந்தை சொல்லித்தான் தெரியும். வல்லி இடும்ப முதலியாரின் மனைவிகளின் பெயர்கள் தெரியுமா என்றால், தெரியாது. சிதம்பரம், சாமிநாதன் என்பவர்கள் வல்லி இடும்ப முதலியாரின் இரண்டாவது மனைவியின் ஆண்மகன்கள் ஆவார்கள் என்றால், சரிதான். இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் வல்லி இடும்ப முதலியாரின் முதல் மனைவியின் வாரிசுதாரர்கள் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால், சரிதான். அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. வேறு சொத்து கொடுக்கப்பட்ட விபரம் நேரில் தெரியுமா என்றால், தெரியும். வல்லி இடும்ப முதலியாரின் முதல் மனைவி மூலமான வாரிசுதாரர்கள் யார் யார் என்றால், கந்தசாமி மற்றும் முத்துசாமி ஆவார்கள். எப்போது அவர்களுக்கு சொத்து கொடுக்கப்பட்டது என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது. வல்லி இடும்ப முதலியாரின் முதல் மனைவி மூலமான வாரிசுகளுக்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றாலும், அது குறித்து இந்த வழக்கில் எந்த விபரமும் சொல்லப்படவில்லை என்றாலும், சரியல்ல. சிதம்பரம் என்பவரின் முதல் மனைவியின் பெயர் என்ன என்றால், தெரியாது. சிதம்பரத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால், முதல் மனைவிக்கு சரஸ்வதி மற்றும் மரகதம் ஆகிய இரண்டு மகள்கள் உள்ளனர். இரண்டாவது மனைவியின் பெயர் என்ன என்றால், கமலம்மாள். சாமிநாதன் என்பவரின் மனைவி பெயர் என்ன என்றால், பவுனம்மாள். ஞாலத்தரசு என்பவரை தெரியுமா என்றால், தெரியாது. 1986 யிலிருந்து 1996 வரை தாவா சொத்தில் குடியிருந்ததாக கூறியுள்ளீர்களே அதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. சிதம்பரம் என்பவர் குடியிருக்க அனுமதித்தார் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் என்னை சிதம்பரம் குடியிருக்க அனுமதித்தார் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். அது வாடகைதாரராக இருக்க அனுமதித்தாரா அல்லது வாடகை ஏதும் தராமல் கருணையின் அடிப்படையில்

அனுமதித்தாரா என்றால், எங்க அப்பா காலத்தில் இருந்து குடியிருந்து வருகிறேன். அதனால் எனக்கு அதுகுறித்து எதுவும் தெரியாது என்றால், சரிதான். சிதம்பரம் என்பவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால், சங்ககிரியில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு எதிரில் ஹோட்டல் நடத்தி வந்தார். எவ்வளவு நாட்களாக ஹோட்டல் தொழில் செய்து வந்தார் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. சுமார் 20 வருடங்களாக இருந்திருப்பாரா என்றால், இருந்திருக்கலாம். சிதம்பரம் எப்போது இறந்தார் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக இறந்திருக்கலாம் என்றால், சரிதான். சிதம்பரம் மற்றும் சம்பத்குமார் இருவரும் சேர்ந்து வழக்கு சொத்தில் அவர்களுக்குரிய பாகத்தை 03.10.1995 அன்றே பவுனம்மாள் என்பவருக்கு ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் விற்று விட்டார்கள் என்றாலும், அதனால் சிதம்பரம் என்பவர் வழக்கு சொத்தில் எங்களை குடியிருக்க அனுமதித்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளது தவறு என்று சொன்னால், சரியல்ல. சிதம்பரம் உயிரோடு இருக்கும்போது வழக்கு சொத்தில் பாகம் கேட்டாரா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்களா அல்லது பிரிக்காமல் அனுபவித்து வந்தார்களா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்திற்கு அருகில் குடியிருந்து வருகிறேன் என்று சாட்சியம் அளித்துள்ளதற்கு சான்றாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்று உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்தின் பரப்பளவு என்ன என்றால், சுமார் 2700 சதுரடிகள் ஆகும். இரண்டு வீடுகளின் நீள அகலம் குறித்த விபரங்கள் தெரியுமாஎன்றால், தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால், வடக்கே பஞ்சாயத்து சாலை செல்கிறது, மேற்கு பக்கமும் வடக்கில் இருந்து செல்லும் ரோடு வளைந்து செல்கிறது. கிழக்கு பக்கத்தில் பார்த்திபன் என்பவர் குடியிருந்து வருகிறார், தெற்கு பக்கத்தில் அம்பாயம் என்பவர் குடியிருந்து வருகிறார். நான் கூறிய சக்குபந்திகள் தவறானது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு குறித்த விபரமோ, வழக்கு சொத்து விபரமோ எனக்கு தெரியாது என்றாலும், சிதம்பரம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் பவுனம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், 1995 இல் ஏற்பட்ட பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தின் மூலம் அனுபவித்து வருகிறார் என்றாலும், சுவாதீனத்தில் இருந்து

வருகிறார் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்திற்கு பவுனம்மாள் தான் முழு உரிமையாளர் என்றாலும், வாதிகளுக்கோ மற்றவர்களுக்கோ எந்த பங்கும் கிடையாது என்றாலும், சரியல்ல. பவுனம்மாள் பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தின் மூலம் வழக்கு சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார் என்ற ஒரே காரணத்திற்காக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

ஒப்பம் / மாதேஸ்வரன்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.